**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 24.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 12 (LW17)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அலெக்ஸ் பாண்டியன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கீழநரியன் கிராமத்தில் குடியிருந்து, டிரைவர் வேலை செய்து வருகிறேன். சாட்சி சௌந்தர்ராஜன் என்பவரை எனக்குத் தெரியும். கடந்த 2 வருடத்திற்கு முன்பாக காலை 04.00 மணியளவில் எனது பக்கத்து ஊரான காக்குளத்தில் இருந்து இராமேஸ்வரம் செல்வதற்காக டாடா மேஜிக் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, கீழநரியன் பஸ் ஸ்டாப் அருகே ஒரு பைக் கிடந்தததை பார்த்தேன். அந்த பைக்கை சாட்சி சௌந்தரராஜன் என்பவர்தான் பயன்படுத்திவந்தார் என்பதால் நான் உடனே அவருக்கு போன் செய்து விவரம் சொன்னேன். அவர் என்னிடம் தான் சம்மந்தப்பட்ட நபரிடம் பேசிவிட்டு சொல்கிறேன் என்று சொன்னார். நான் உடனடியாக கிளம்பி இராமநாதபுரம்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:49:21 +0530

வந்துவிட்டேன். அங்கு கிடந்த பைக் யாருடையது, என்ன நடந்தது என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. இறந்துபோன கருப்பையாவை எனக்குத் தெரியும். அடித்துக்கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

இது சம்மந்தமாக நான் விசாரித்த போது, கடந்த 30.07.2021 ம் தேதி காலை 05.30 மணியளவில் சாட்சி சௌந்தரராஜன் கருப்பையா மனைவி வளர்மதிக்கு போன் செய்து, கருப்பையா எங்கே என கேட்டதாகவும், அதற்கு வளர்மதி உங்க வீட்டிற்கு தானே வந்திருக்கிறார் என்று சொன்னதாகவும், தான் சாயல்குடி வந்துவிட்டேன் என சொல்லி, வீட்டில் கேட்டு சொல்கிறேன் என சொல்லி வைத்ததாகவும், பிறகு கனிராஜனுக்கு சௌந்தர்ராஜன் போன் செய்து, கருப்பையா நம்ம வீட்டில் இருக்கிறாரா என்று கேட்டேன் என்றும், அதற்கு அவர் அண்ணன் முதல்நாள் இரவே கருப்பையா நம்ம வீட்டிற்கு வந்துவிட்டு, இரவே வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று சொன்னார் என்றும், உடனடியாக சௌந்தர்ராஜன் வளர்மதிக்கு போன் செய்து, கருப்பையா முதல் நாள் இரவே எங்கள் வீட்டை விட்டு போய்விட்டார் என்று சொல்லவும், வளர்மதியும் அவரது குழந்தைகளும் 30.07.2021 ம் தேதி காலை 06.30 மணியளவில் கருப்பையாவை தேடி சென்ற போது, கீழநரியன் பஸ் ஸ்டாப் அருகே கருப்பையாவின் Hero Splender Plus பைக் முன்பகுதி உடைந்து இரத்தக்கறை படிந்த நிலையில் கிடந்தது என்றும், இதனை பார்த்த வளர்மதி பஸ் ஸ்டாப்பை சுற்றி தேடிய போது கீழநரியன் பஸ் ஸ்டாப் கிழக்குப்புறம் கருப்பையா கொலை செய்யப்பட்டு கிடந்ததாக



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:49:24 +0530

கேள்விப்பட்டேன் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கருப்பையாவின் கொலை சம்மந்தமாக விசாரித்த போது, எங்கள் ஊரை சேர்ந்த காளீஸ்வரியை ரமேஷ்குமாரை கையை பிடித்து இழுத்ததில் முன் விரோதம் இருந்தது என்றும், அந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு, ரமேஷ்குமார், சுரேஷ்குமார், ராஜ்குமார், சரத்குமார், தமிழரசன், கார்த்திகைசாமி, ரஞ்சித், பெரியசாமி, ரகுபதிபாண்டி, கணபதிபாண்டி, முத்துராஜ், காளிதாஸ் ஆகியோர்கள் சேர்ந்து எங்கள் ஊருக்கு பைக்கில் வந்து சென்ற கருப்பையாவை பஸ் ஸ்டாப் அருகே வைத்து கொலை செய்ததாக கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல.

ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:49:27 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .